RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1922

OPEN ACCESS

# அகநானூறு காட்டும் பண்டையத் தமிழரின் வாழ்வியல் அறம்

க. ஜினிமோள் [அ, *], ச. மேகலின் சந்திரா [அ]

[அ] தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்-629165, தமிழ்நாடு, இந்தியா

# Life Virtues of the Ancient Tamils in Akananuru

K. Jinimol [a, *], S. Mahalin Chanthira [a]

[a] Department of Tamil, Nesamony Memorial Christian College, Marthandam-629165, Tamil Nadu, India

* Corresponding Author: veneshvin@gmail.com

Received: 28-07-2022
Revised: 28-09-2022
Accepted: 07-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Akananuru shows up the life virtues of the ancient Tamil people. In this way Sangam literary works are loaded with moral values. Sangam period is the golden age for Tamil people and is the best literature of Tamil. Sangam literature includes Ettuthogai and Patthupaatu. This literature presents the life and history of the ancient Tamil people. It was composed by 473 poets; this collection contains 26,350 lines and 2,387 hymns. When the Tamil people starts to follow good deeds in their life, automatically their life will stabilize. In this way, Akananuru becomes a treasure that regulates life. It was compiled by Urithrasanmanar, son of Madurai Uppurikudikilar. Compiled by Pandyan Ukura Peruvaluthi. It ranges from 13 feet to 31 feet. This book is also known as Nedunthogai, Perunthogai Nanuru, Agappaatu. In this article the dignity of women and their virtues are important. The article also determines women's high quality of chastity. Our ancient couples were the ones who lived a wholehearted life. The husband and wife enjoyed themselves by giving food and entertaining the guests and no estrangement between them. The ancient Tamils enjoyed sharing food with others. Their family life is filled with love and virtue. Giving to the bereaved is also a form of charity. The ancient Tamil people who lived with the principle that action is the life of a man, valued materialism as one of the duties. They managed a beautiful household with the material obtained through great effort. Friendship is more important for them than life. They lived in harmony without showing hatredness.

**Keywords:** Akananuru, Life Virtues, Ancient Tamils, Literature

## முன்னுரை

சங்ககால இலக்கியங்கள் அகம் புறம் என பகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இல்லறம் சார்ந்த நிகழ்வுகள் அகம் ஆகும். அகம் சார்ந்த செய்திகளே மக்களின் வாழ்வியல் மேன்மைகளை வெளிக்கொணர்கின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு அறம் சார்ந்த செய்திகளை அதிகமாக வெளிக்கொணருகிறது. “அகநானூறு காட்டும் பண்டையத் தமிழரின் வாழ்வியல் அறம்” என்ற இக்கட்டுரையானது, வாழ்வின் மேன்மைக்கு அறம் எவ்வாறு உதவுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதைத் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இல்லறத்தில் மகளிரின் மாண்பு

பண்டையத் தமிழர்கள் குடும்ப வாழ்வு பற்றி மிகவும் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். இல்லறமே நல்லறம் என்ற கூற்றிற்கு இணங்க வாழ்ந்தவர்கள் அவர்கள். இல்லற

மகளிர் தம் கணவரை உயிராகக் கருதி வாழ்ந்தனர். நாணம், கற்பு ஆகிய இரண்டையும் தம் உயிரினும் மேலாக அக்காலப் பெண்டிற் போற்றி வாழ்ந்தனர்.

இதனை தொல்காப்பியர்,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று"

என்னும் பாடல்வழி எடுத்துரைக்கிறார் (Rasa, 2007).

பெண்ணிற்கே உரிய தனிப் பண்பாய் விளங்குவது கற்பெனும் பண்பாகும். கற்புக்கடம் பூண்ட தன் தலைவியைத் தெய்வ நிலையில் வைத்து தலைவன் ஒருவன் புகழ்வதாய் அகநானூற்றுப் பாடல் சுட்டிக் காட்டுகிறது.

இதனை,

"ஆன்ற கற்பின் சான்ற பெரியன்

அம்மா அரிவையோ அல்லன்"

இவ்வாறு தலைவியின் கற்பினைப் பற்றி தலைவனே புகழ்ந்து கூறுவதனைக் காணலாம் (Puliyur Kesigen, 2010).

## மனமொத்த வாழ்க்கை

கலித்தொகைப் பாடலொன்று குடும்பச் சூழ்நிலையின் காரணமாக ஓர் ஆடையினைக் கிழித்து தலைவன் தலைவி இருவரும் உடுத்திக் கொள்ளும் சூழ்நிலை வந்த போதும் அன்பினால் ஒன்றி வாழ்வதே இல்லறம் என்பதனை நிலையான அறமாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்ததை,

"ஓரோ ஒகை தம்முள் தழீஇ ஓரோ ஒகை

ஒன்றன் கூறாடை உடுப்பவரேயாயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது (Annamalai, 2003). இவ்வாறு வறுமையிலும் செம்மையாய் இல்லறத்தை நடத்தியச் செய்தியினை அறியமுடிகிறது.

## விருந்தோம்பல் பண்பு

பண்டையத் தமிழர்கள் போற்றிய சமூக அறங்களுள் விருந்தோம்பல் தனிச் சிறப்பினைப் பெற்றுள்ளது. வள்ளுவர் இதனை,

"விருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்கிறார். இக்குறளில் ஒருவன் இவ்வாழ்க்கை வாழ்வது எதற்கென்றால் விருந்தோம்பி வாழ்வதற்கே ஆகும் என்று கூறியுள்ளார் (Kulanthai Pulavar, 2005).

விருந்தோம்பலில் பழந்தமிழர்கள் சிறந்தவர்களாக விளங்கியதை அகநானூறு தெளிவாகக் காட்டியுள்ளது.

"வரும் வழி வம்பலர்ப்பேணி கொவலர்

முழுவிடைப் பூண்டிய குழா அயத் தீம்புளி

செவி அடைதீரத் தேக்கிலைப் பகுக்கும்"

இப்பாடலானது பாலை வழியாக பசியாக வருவோரைக் கண்ட ஆயர்கள் இளைய எருதுகளின் கழுத்தில் கட்டிய மூங்கிற்குழாயுள் அடைத்து வைத்த சுவை மிக்க புளிச்சோற்றினைத் தேக்கின் இலையில் இட்டு அப்புதியோரின் பசியினை நீக்கியச் செய்தியினைக் காணலாம். அதுமட்டுமின்றி விருந்தினரின் வருகையால் கணவன் மனைவியின் ஊடல் தீர்ந்தச் செய்தியினை கலித்தொகைப் பாடல் வாயிலாக அறியலாம் (Puliyur Kesigen, 2010).

“விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்

சூளஞ்சவும் அரும் பெற்ற புதல்வனை

யணைப்ப காணவும் ஆங்கவிற் தொழுகு மென் புலவி”

இவ்வாறாக விருந்தினருக்கு விருந்து கொடுத்து உபசரித்துப் பயனுள்ள வாழ்வினைப் பண்டையத் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளமையைக் காணமுடிகிறது (Annamalai, 2003).

## பகிர்ந்துண்ணல்

சங்ககால மக்கள் பகிர்ந்துண்ணும் பண்பினைப் பெற்று காணப்பட்டனர் என்பதனை,

“மேட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி

மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்”

என்ற அகநானூற்றுப் பாடலானது புலப்படுத்துகிறது (Puliyur Kesigen, 2010). இதில் பரதவர்களின் பகிர்ந்துண்ணும் பண்பு அழகாகக் கூறப்பட்டுள்ளது.

நற்றிணைப் பாடல் ஒன்று கானவன் ஒருவன் வேட்டையாடிக் கொண்டுவந்த உணவினைத் தனக்கு எதிர்காலத்தில் பயன்படும் என்று சேமித்து வைக்காமல் சுற்றதார்க்குப் பகிர்ந்து கொடுத்த செய்தியினைக் காணலாம். இதனை,

“கல்லதர் அரும்புழை அல்கி, கானவன்

வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை

புனை இருங்கதுப்பின் மனையோர் கெண்டி

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட”

என்னும் பாடல் தெளிவுபடுத்துகிறது (Tamizhannal, 2003).

## மக்கட்பேறு

இல்லறம் என்பது அன்பும் அறனும் கொண்டு வாழ்வது ஆகும். அத்தகைய வாழ்வில் பெறும் பேறுகளுள் தலையாயது மக்கட் பேறாகும். இதனை வள்ளுவர்,

“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற”

என்கிறார். ஒருவன் பெற வேண்டிய பேறுகளில் நன்மக்களையொருவன் பெறுவதே தலைசிறந்தது என்று வள்ளுவர் பெருந்தகை கூறுகிறார் (Kulanthai Pulavar, 2005).

வாழையடி வாழையாய் வளர்ந்து நிலைத்து வரும் குடிப்பெருமையை உயர்த்திடும் மக்கட் பேற்றைப் பண்டைய தமிழர்கள் மிகவும் விரும்பினர் என்பதனை அகநானூற்றுப் பாடல் வழியாக அறியலாம்.

“இம்மை உலகத்து இசையோடும் விளங்கி

மறுமை உலகமும் மறுஇன்று எய்துப

சிறுவர் பயந்த செம்மலோர் எனப்

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்

வாயெ ஆகுதல் வாய்த்தமனம்"

என்னும் பாடலானது புதல்வரைப் பெற்றோரே இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுவர் என்று கூறுவதிலிருந்து மக்கட்பேற்றின் மேன்மையை அறியலாம் (Puliyur Kesigen, 2010).

## கொடை அறம்

இரப்போர்க்குக் கொடுப்பதும் ஒருவகை கொடை அறம் ஆகும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலையும் புறநானூறும் சுட்டிக்காட்டுகின்றன. அகநானூற்றுப் பாடல் ஒன்று இரப்போர்க்குக் கொடுப்பதனை,

"இரந்தோர்க்கீயாது ஈட்டியோன் பொருள் போல்

பரந்து வெளிப்பாடாதாகி

வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே"

என்ற பாடலானது தம்மை நம்பியும், நயந்தும் வந்தவர்களின் வறுமையைப் போக்க இயலாமை இழிவு தருவதோடு அவனது செல்வத்தையும் அழிக்கும் என்று அகநானூறு கூறுகின்றது (Puliyur Kesigen, 2010).

அறம் எனப்படுவது உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் வேறுபாடு காணாது வேண்டிய உணவையும், உடையையும், தங்கும் இடத்தையும் வழங்குவதே ஆகும் என மணிமேகலை குறிப்பிடுகிறது.

இவ்வாறு பண்டையத் தமிழர்கள் இரப்போர்க்கு இல்லையென்றுக் கூறாமல் கொடுத்து வந்தச் செய்தியினைக் காணலாம்.

## கடமையுணர்வு (பொருளீட்டல்)

உழைப்பால் முயன்று பொருள்தேடி இல்லறம் நடத்துதலே சிறப்பாகக் கருதப்படுகின்றது. இல்லறம் இனிதே நடைபெற பொருட் செல்வம் இன்றியமையாத தேவையாகும். பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை வள்ளுவர்,

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு

இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்று குறிப்பிடுகிறது (Kulanthai Pulavar, 2005).

பொருளை ஈட்டும் கடமை ஆடவர்க்கே உரியதாய் இருந்தமையை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. எனவே தான் வினையே ஆடவர்குயிரே" என்றனர். அக்காலத்தில் ஒவ்வொருவரும் தான் வருத்திப் பொருளீட்டிய செல்வத்தைக் கொண்டே வாழ்வு நடத்தினர்.

இதனை,

"உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்

நன்றுபுரி காட்சியர் சென்றனர் அவர் என"

என்ற பாடல் வரி சுட்டுகின்றது (Puliyur Kesigen, 2010). பொருளீட்டச் செல்லும் ஆடவரின் வினை முயற்சிக்குச் சான்றாகின்றது. அவ்வாறு கிடைத்தப் பொருளால் அவர்கள் அழகாக இல்லறம் நடத்தினர் என்பதனையும் அறிய முடிகிறது.

## நட்பு

உயிருடன் உயிர் கலந்து ஒருயிராய் ஒன்றிய தன்மையதாம் உத்தமமானது நட்பு, இந்நட்பில் வெறுப்பு என்பது தலைகாட்டுவதில்லை. பிரிவு என்று ஒன்றும் இல்லை. இக்கருத்தை,

"துனி இன்று இயைந்த துவரா நட்பின்

இனியவர் அம்ம, அவர்? என முனியாது

நல்குவார் நல்ல கூறினும், அக்கலும்

பிரியாக்காதலொடு உழையர் ஆகிய" (Puliyur Kesigen, 2010)

"உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்

செயிர்நீர் நெஞ்சமொடு செறிந்தார்"

என்ற பாடல்வரிகள் வெளிப்படுத்துகின்றன (Puliyur Kesigen, 2010). நட்பினர் ஈருடல் ஒருயிராய்க் கலந்து மிளிரும் பான்மையை அகநானூற்றுப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

## முடிவுரை

கற்பு என்னும் கொள்கையில் பிறழாத மகளிரின் மாண்பினைப் பற்றியும், வறுமையிலும் ஒத்த மனமுடன் வாழ்ந்த வாழ்க்கையினையும், விருந்தோம்பல் என்னும் உயர்ந்த குணத்தினையும், இரப்போர்க்கு இல்லையென்று கூறுவது இழிவு என்பதால் இரப்போர்க்கு கொடுக்கும் உயரிய பண்பினையும் பெற்று வாழ்ந்தவர்கள் நம் சங்ககால மக்கள். அது மட்டுமின்றி ஆடவரின் கடமையே பொருளீட்டல் என்னும் அளவிற்குக் கடமை உணர்வுடன் வாழ்ந்தனர். நட்பிற்கு இலக்கணமாகவும் சங்ககால மக்கள் வாழ்ந்தனர். இவ்வாறாக அகநானூறு காட்டும் அறம் என்னும் கட்டுரையின் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது.

## References

Annamalai, S. (2003) Kalithogai, Kovilur Madalaiyam, Kovilur, India.

Kulanthai Pulavar, (2005) Thirukkural, Suradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigen, (2010) Agananooru, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Rasa, K. (2007) Tholkappiyam Porulathigaram, Paavai Pathippagam, Chennai, India.

Tamizhannal, (2003) Nattrinai, Kovilur Madalaiyam, Kovilur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License